# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021, மே மாதம் 13 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 22.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2021 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 9/2020

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியின் (v) ஆம் விடயத்தில் “அதன்பின்னரான ஏதேனும் வரிவதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அதன்பின்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் ஆனால் 2019, நவெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதிக்கு” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியின் (v) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“ (vi) 2019, திசெம்பர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2019, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும் 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் எட்டுச் சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 2/27 ஆகும்);”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளில் உள்ளது எப்படியிருப்பினும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளில் உள்ளது எது எப்படியிருப்பினும், 2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (அ) என்னும் பந்தியில், ''அத்தகைய பண்டங்களின் வழங்குநர் அத்தகைய பண்டங்களை ஏற்றுமதி செய்துள்ளவிடத்து,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கான கொடுப்பனவு அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம் பெற்றுள்ளதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றனவான அத்தகைய பண்டங்களை அத்தகைய பண்டங்களின் வழங்குநர் ஏற்றுமதி செய்துள்ளவிடத்து,'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் –

(அ) (i) ஆம் உட்பந்தியில், ''இலங்கைக்கு வெளியேயுள்ள அசைவற்ற ஆதனம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பால தான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதி யொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ்

உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றதான இலங்கைக்கு வெளியேயுள்ள அசைவற்ற ஆதனம்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) உட்பந்தி (iiஅ) வில், "சேமிப்பிட வியாபாரத்தின் கீழ் மீள் ஏற்றுமதியின் நோக்கத்துக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றனவான சேமிப்பிட வியாபாரத்தின் கீழ் ஏற்றுமதியின் நோக்கத்துக்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பண்டங்கள்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) (iii) ஆம் உட்பந்தியில், "அத்தகைய உரிமம் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்காகவிருக்குமிடத்தும் பயன்படுத்தப்படுவதற்காகவிருக்கும் அளவுக்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறுமாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள்

1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றதாக அத்தகைய உரிமம் இலங்கைக்கு வெளியே பயன் படுத்தப்படுவதற்காகவிருக்கும் அளவுக்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) உட்பந்தி (v) இல், ''அதற்கென வெளிநாட்டு நாணயத்தில் வங்கி ஒன்றுக்கூடாகக் கொடுப்பனவு பெறப்படுவதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அதற்கென அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கி யொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு பெறப்படுவதும்'' என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(உ) உட்பந்தி (vi) இல், ''அதற்கான கொடுப்பனவு வங்கியூடாக வெளிநாட்டு நாணயத்திலாகும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பால தான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்ற தாகும்;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஊ) உட்பந்தி (vii) இல், ''சேவைகளுக்கான கொடுப்பனவு, அத்தகைய சேவைகள் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதற்கு அத்தியாவசியமான சேவைகளாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்பட்ட அளவுக்கு வங்கியொன்றின் ஊடாக அந்நிய நாணயத்தில் பெறப்படுகின்றனவோ அந்தச் சேவைகள்.''. என்னும் சொற்களுக்குப் பதிலாக "எந்தச் சேவைக்கான கொடுப்பனவு, அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றதோ அத்தகைய சேவை தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதற்கு அவசியமான சேவையாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்பட்ட அளவுக்கு அந்தச் சேவை.''. என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) (இ) என்னும் பந்தியில், ''இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கையிலுள்ள வங்கியொன்றின்மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக இலங்கைக்கு வெளியேயிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(4) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குகை தொடர்பிலான கொடுப்பனவு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம்பெற்றுள்ளதோ அல்லது அத்தகைய சேவையின் வழங்குகை எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படாதிருக்கின்றமை எவ்வாறிருப்பினும், அத்தகைய பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன அல்லது சேவைகள் புரியப்படுகின்றன என ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதம் அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குகையின்மீது ஏற்புடையாதாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) (V) ஆம் பந்தியில், "2016, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2016, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2020, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) (V) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(vi) 2020, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்று கின்ற ஆள் ஒவ்வொருவரும் –

(அ) விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின் முடிவில், விடயத்திற்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலனவான வழங்குகை களின் மொத்தப் பெறுமதி எழுபத்தைந்து மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேலாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டுமாத காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களின தும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற் பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி முந்நூறு மில்லியன் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்டதை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவை களினதும் வரிவிதிக்கப்படற்பாலன வான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி எழுபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டுமாத காலப்பகுதியில் முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

*(2)* அப்பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவில், "சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"தன்னிச்சையான பதிவு*

12. (1) மூன்றாம் அத்துடன் 10 ஆம் பிரிவுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்றவரும் ஒரு வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக்

கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது எவையேனும் வரிவிதிக்கப்படற்பாலனவான பண்டங்களை இறக்குமதி செய்கின்றவருமான எவரேனுமாள், பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்காக இச்சட்டத்தின் கீழான பதிவுக்காக, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக:

ஆயின், எவ்வாறாயினும், ஆணையாளர் தலைமையதிபதி, கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை விண்ணப்பகாரருக்கு அளித்தபின்னரும், அத்தகைய விண்ணப்ப காரரினால் கொண்டுநடாத்தப்படும் தொழிலின் தன்மையையும், முற்போந்த இரு வரிவிதிக்கப்படற்பாலனவான காலப் பகுதிகளில் அத்தகைய விண்ணப்ப காரரினால் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற் பாலனவான வழங்கல்களின் பெறுமதியை யும் மற்றும் அவரது வரிவிதிக்கப்படற் பாலனவான வழங்கல்களின் பெறுமதி 10 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பெறுமதியை விஞ்சமாட்டாதென்ற நிகழ்தகவையும் கருத்திற்கொண்டும், அத்தகைய விண்ணப்பகாரரைப் பதிவு செய்வதற்கு மறுக்கலாம்; அத்துடன்

(ஆ) பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்றவரும் வரிவிதிக்கப்படற் பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்துகின்றவருமான ஆளொருவரின்

விடயத்தில், 2020, சனவரி 1 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக.

(2) இப்பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் -

(அ) அவரது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கு கைகளின் மொத்தப் பெறுமதியை விஞ்சினாலொழிய; அல்லது

(ஆ) அவரது மொத்த வழங்குகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கின்ற ஓர் ஏற்றுமதியாளராக அவர் இருந்தாலொழிய; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறாகப் பதிவு செய்யப்பட்ட இனங்காணப்பட்ட வழங்கு நரொருவராக எளிமையாக்கப்பட்ட சேர் பெறுமதி வரித்திட்டத்தின் நோக்கத்துக் காகப் பதிவுசெய்வதற்கு அத்தகைய ஆள் விரும்பினாலொழிய,

ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப் பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித்திட்டத்துடன் பதிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில், (iii) ஆம், (iv) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(iii) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட மகளிர் உட்காற்சட்டைகள் (panties), குறுங்காலுறைகள், பிறீவுகள் மற்றும் பொக்சர் குறுங்காற்சட்டைகள் தவிர்ந்த அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும்,-

(அ) 2018, ஓகத்து 16 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2019, நவம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) 2019, நவம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2021, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு நூறு ரூபாவாதல் வேண்டும்;

(இ) 2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(iv) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட ஆறு மகளிர் உட்காற்சட்டைகள் (panties), குறுங்காலுறைகள், பிறீவுகள் மற்றும் பொக்சர் குறுங்காற்சட்டைகளுக்கு,-

(அ) 2018, ஓகத்து 16 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2019, நவம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) 2019, நவம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2021, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு நூறு ரூபாவாதல் வேண்டும்;

(இ) 2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "(v) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vi) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்குகை தொடர்பிலான

கொடுப்பனவு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம்பெற்றுள்ளதோ அல்லது அத்தகைய சேவையின் வழங்குகை எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப் பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கி யொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படாதிருப்பின்.";

(3) அப்பிரிவின் (14) ஆம் உட்பிரிவில், "(14) மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(14) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, (3) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை யானது பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்துக் கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில், (xxx) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(xxxi) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் விதந்துரைக்கப்பட்டவாறு, 2020, மே 20 ஆந் தேதியிலிருந்து உலகம் பரவு தொற்று நோயாகவுள்ள கோவிற்- 19 ஐ

எதிர்கொள்வதற்கான சுகாதார சேவைகளை வழங்குவதற்குத் தேவைப்பட்டவாறு, மருத்துவ, அறுவைமருத்துவ மற்றும் பல்மருத்துவக் கருவிகள், உபகரணங்கள், துணைப்பொருட்கள் மற்றும் அவற்றின் பாகங்கள், வைத்தியசாலை அல்லது மருத்துவத் தளபாடங்கள் மற்றும் அவுடதங்கள், இரசாயன மற்றும் ஒத்த இனங்களுட்பட, எந்திரத்தொகுதியும் சாதனங்களும்;”

(2) (ஆ) என்னும் பந்தியின் (xi) ஆம் விடயத்தின் (இ) என்னும் உபவிடயத்தில், “2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கி ஆனால் 2019, நவெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) (ஆ) என்னும் பந்தியின் (xi) ஆம் விடயத்தின் (இ) என்னும் உபவிடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(ஈ) வதிவிட வசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகைதவிர, எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றுள்ளவிடத்து.”;

(4) (2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டவாறான) (ஆ) என்னும் பந்தியின் (Li) மற்றும் (Lii) என்னும் விடயங்களை முறையே (Lii) மற்றும் (Liii) என்னும் விடயங்களாக மீள இலக்கமிடுவதன்மூலமும்;

(5) மீள இலக்கமிடப்பட்ட (Liii) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்பகுத்துவதன் மூலமும்:-

"(Liv) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி, தகவல் தொழினுட்பவியல் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக இயன்றனவாக்கப்பட்ட சேவைகள்;

(Lv) 2020, ஏப்பிறல் 29 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் சுகாதார மற்றும் சுதேச மருத்துவச் சேவைகள் அமைச்சுக்கு, சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு, இலங்கைத் தரைப்படைக்கு, இலங்கைக் கடற்படைக்கு, இலங்கை வான்படைக்கு மற்றும் இலங்கைப் பொலிசாருக்கு 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஏற்றுமதியாளரினால் சுகாதாரப் பாதுகாப்புச் சாதனங்களும் ஒத்த தயாரிப்புகளும்;

(Lvi) 2020, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு இலங்கைச் சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஒரு பயண முகவரினால் உள்வருகைச் சுற்றுலாப்பயணங்கள் தொடர்பிலான சேவைகள்;";

(6) அப்பாகத்தின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(க) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், இறக்குமதிமீது விலக்களிக்கப் பட்டனவாகவிருந்திருக்கும், [பந்தி (இ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்கள் தவிர] எவையேனும் பண்டங்களின் உள்நாட்டு வழங்குகை.".

செல்லுபடியாக்கல்

**9**. இரண்டாயிரத்துப் பத்தொன்பதாமாண்டு திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப் படுகின்றதோ அத்தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு சேர்பெறுமதி வரியைச் சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேகரிப்பு செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படு கின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றார்:

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*